1974 சனவரி 22]

திரு. கா. வேழவேந்தன் : அமைச்சர் அவர்களுக்கு இதற்கு நன்றி செலுத்துகிற நேரத்தில் மொத்தம் முன்பு 8 லட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்டதே. மேலும் தொகை ஒதுக்கப்படுமா? அடிப்படையான வேலைகள் எப்போது துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, விஞவில் குறிப்பிடப்பட்டுள்ள பால வேலைக்குத் தோராயமாக 8.25 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்ற மதிப்பீட்டின்படி 1973 ஜூலை மாதம் கூடிய நிதிநிலைக்குழு இவ்வேலைக்கு ஒப்புதல் அளித்தது. ஆனல், திருத்திய மதிப்பீட்டின்படி இவ் வேலைக்கு ரூபாய் 4 இலட்சம் போதுமானது என்ற கருத்துக்கு ஏற்ப இப்பால வேலையை 4 இலட்ச ரூபாய் செலவில் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மேலவெள்ளூர்-அம்பலத்தாடி இணைப்புச்சாலை

* 81 விஞ.—**திரு. த. சோனையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மேலவெள்ளூர் வெள்ளக்கரை சாலையில் இருந்து அம்பலத்தாடிக்குச் செல்லும் இணைப்புச்சாலை எப்பொழுது பழுது பார்க்கப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மேலவெள்ளூர்-வெள்ளக்கரை சாலையிலிருந்து அம்பலத்தாடிக்குச் செல்லும் இணைப்புச் சாலை மராமத்து வேலை தற்போது ஊரக வேலைவாய்ப்பு விரைவுத் திட்டத்தின்கீழ் (Crash Scheme for Rural Employment) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ் வேலை 31—12—1973-க்குள் பூர்த்தி செய்யப்படும்.

சின்னக்கண்ணனூர் சாலை

* 82 விஞ.—**திரு. த. சோனையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானமதுரை ஊராட்சி ஒன்றியம், சின்னக்கண்ணனூருக்கு தார்ச்சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா: மானாமதுரைக்கு அருகாமையில் இருக்கிற சின்னக்கண்ணனூர் என்பது ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கு மேற்கொண்ட மக்கள் தொகை கொண்டதாகும். 1,500 மக்கள் தொகைக்கு மேற்கொண்ட கிராமங்களுக்கு தார் சாலை போட வேண்டுமென்ற திட்டத்தை உருவாக்கி கிராமப்புறங்களில் அருமையான தார் சாலைகள் போட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்தக் காலத்தில் சின்னக்கண்ணனூர் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்டதாக இருந்தும், வழி நெடுக ஓரத்தில் இரண்டாயிரத்திற்கு அதிகமாகவும் மக்கள் தொகை உள்ளது, ஆக நாலாயிரம் மக்கள் தொகை உள்ள சின்னக்கண்ணனூருக்கு தார் சாலை வராதது அங்குள்ள மக்களுக்கு ஒரு பெருங்குறையாக இருக்கிறது. ஆகவே தமிழக அரசு அந்தப் பெருங்குறையைத் தீர்த்து வைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தேசிய நெடுஞ்சாலை 49-லிருந்து சின்னக்கண்ணனூரை இணைப்பதற்கு புதுக்குளம் ஊர் வழியாக ஒரு சாலை இணைப்பு வேண்டும். தற்போது சின்னக் கண்ணனூரிலிருந்து புதுக்குளம் வரை ஒரு சாலை உள்ளது. தேசிய நெடுஞ்சாலை 49 மேலுள்ள கரிசல்குளம் என்ற ஊரையும் புதுக்குளம் என்ற ஊரையும் இணைக்கும் சாலை வேலையை ஊராட்சி ஒன்றியம் தற்போது எடுத்துக்கொண்டுள்ளது. நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார். இச் சாலை அமைப்பு முடிவடைந்தால் சின்னக்கண்ணனூரும் தேசிய நெடுஞ்சாலை 49-ல் உள்ள கரிசல்குளம் ஊர் இணைக்கப்பட்டு குறிப்பிட்ட ஊருக்கு தேசிய நெடுஞ்சாலையுடன் நேரடி இணைப்பு ஏற்படும் என்று. சின்னக்கண்ணனூர் என்ற கிராமத்தின் மக்கள் தொகை 1,500-க்கு கீழ் இருப்பதால் இச்சாலை வேலையை தனி ஊர்ச்சாலை திட்டத்தில் எடுத்துச் செய்ய இயலாது. வளமான காலம் வரும்வரை பொறுத்திருக்க வேண்டும்.

திரு. த. சோனையா: சின்னக்கண்ணனூர் என்பது 1,500 ஜனத் தொகைக்கும் குறைந்தது என்று சொல்வது சரியல்ல. அந்தப் பஞ்சாயத்தில் ஐந்து கிராமங்கள் உள்ளன. அதில் பாமக்குடி யூனியனில் மூன்று கிராமங்கள், மானாமதுரை யூனியனில் இரண்டு

1974 சனவரி 22]

கிராமங்கள் என்று இருக்கின்றன. இரண்டு யூனியன்களில் உள்ளதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். இரண்டு பகுதிகளில் ஒரு பகுதிதான் வந்திருக்கிறது. இரண்டு பகுதிக் கணக்குகளையும் நான் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே இந்த இரண்டு பகுதிகளையும் இணைத்துப் பார்த்து சின்னக்கண்ணனூருக்கு தார் சாலை போட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1,500 மக்கள் தொகை கொண்டவற்றிற்கு சாலை அமைப்பதுபற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி இப்போது சொல்வது சரியல்ல என்று கருதுகிறேன். ஏனெனில் மத்திய அரசின் உதவி ஒருசிலவற்றிற்குப் பெற வேண்டியிருப்பதால் அதைப்பற்றி விளக்கமாகச் சொல்வது அவ்வளவு சரியல்ல.

Supply of rice to other States

* 83 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the representatives of the West Bengal Government had met the Hon. Chief Minister in July 1973 to seek rice supplies; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) மேற்கு வங்காள மாநிலத்தில் உணவுப் பற்றுக்குறை இருந்த காரணத்தால், அம்மாநில அரசின் உணவு அமைச்சர், 19—7—1973 அன்று மாண்புமிகு உணவு கூட்டுறவு அமைச்சர் அவர்களைச் சந்தித்து அம்மாநிலத்திற்கு அரிசி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அதன் பின்னர், துர்கா பூஜையின்போது அரிசி வழங்கக் கோரி மேற்கு வங்காள முதலமைச்சர் கேட்டுக் கொண்டார். அதையொட்டி இரு தரப்பு அடிப்படையில் 3,000 டன் அரிசியை மேற்கு வங்காளத்திற்கு வழங்குவதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

திரு. ரா. ரா. முனுசாமி : 1973-74-ல் தமிழ்நாட்டில் அதிக உற்பத்தி இருந்தபோது பக்கத்து மாநிலங்களுக்கு அரிசி வழங்கப்பட்டதே, எந்தெந்த மாநிலங்களுக்கு எவ்வளவு எவ்வளவு அரிசி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?